**நவம்பர் – 22**

# தமிழ்நாடு செய்திகள்

## இந்தியாவின் மிகப்பெரிய ஐபோன் உற்பத்தி அலகு

- இந்தியாவில் ஆப்பிள் ஐபோன் தயாரிக்கும் மிகப்பெரிய உற்பத்தி அலகானது பெங்களூரு அருகே அமைந்துள்ள ஒசூர் அருகே நிறுவப்பட உள்ளது.
- இதற்காக ஒசூரில் டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் தனது உற்பத்தி மையத்தினை விரிவாக்கம் செய்து வருகிறது.
- இந்தியாவில் விஸ்ட்ரான் (கர்நாடகா), ஃபாக்ஸ்கான் மற்றும் பெகாட்ரான் ஆகிய மின்னணுப் பொருட்கள் உற்பத்தி நிறுவனங்களால் ஐபோன்கள் தயாரிக்கப்பட்டு நிறுவனத்திடம் வழங்கப் படுகிறது.
- தமிழ்நாட்டில் ஏற்கனவே ஃபாக்ஸ்கான் மற்றும் பெகாட்ரான் ஆகிய நிறுவனங்கள் அமைந்துள்ளன.




# தேசியச் செய்திகள்

## இந்தியா மின்சார வினியோக அமைப்பு கட்டுப்பாட்டாளர் நிறுவனம்




- இந்தியாவின் தேசிய விநியோகக் கட்டமைப்பு இயக்குநரான பவர் சிஸ்டம்

ஆபரேஷன் கார்ப்பரேஷன் லிமிடெட் (POSOCO) ஆனது இந்தியா மின்சார வினியோக அமைப்பு கட்டுப்பாட்டாளர் நிறுவனம் என மறுபெயரிடப்பட்டது.

- முழுக்க முழுக்க மத்திய அரசிற்குச் சொந்தமான நிறுவனமான இது மின்துறை அமைச்சகத்தின் கீழ் வருகிறது.
- இந்திய மின்சார வினியோக அமைப்பு, ஒரு தனி நிறுவனமாக, மின்சாரம் அனுப்புதல் செயல்பாடுகளை வழங்கியது.
- இது தேசிய மின்சாரம் அனுப்புதல் மையம் (NLDC) மற்றும் 5 பிராந்திய மின்சாரம் அனுப்புதல் மையங்கள் (RLDCs) ஆகியவற்றின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்கிறது.
- தேசிய மின்சாரம் அனுப்புதல் மையம் என்பது தேசிய மின்சக்தி அமைப்பின் ஒருங்கிணைந்தச் செயல்பாட்டை உறுதி செய்யும் ஒரு உச்ச அமைப்பாகும்.

## இந்திய இராணுவத்தின் பணியாளர் கல்லூரி - பெண் அதிகாரி




- இந்திய இராணுவ வரலாற்றில் முதல் முறையாக, 6 பெண் அதிகாரிகள் புகழ்பெற்றப் பாதுகாப்புப் பணிகள் பணியாளர் கல்லூரியில் (DSSC) இணைய உள்ளனர்.
- இது 2021 ஆம் ஆண்டில் இந்திய இராணுவமானது, பெண் அதிகாரிகளுக்கு நிரந்தரப் பணி வாய்ப்பு வழங்கியதையடுத்து இந்த நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது.
- இந்திய இராணுவத்தில் உள்ள மற்ற பாடத் திட்டங்கள்- தேசிய பாதுகாப்பு கல்லூரி, உயர்நிலைப் படைப்பிரிவு மற்றும் உயர் பாதுகாப்பு மேலாண்மை - அனைத்தும் பரிந்துரைக்கப் படுகின்ற நிலைகளாகும்.
- பாதுகாப்புப் பணிகள் பணியாளர் கல்லூரிக்கான (DSSC) தேர்வு முறையானது ஒரு போட்டித் தேர்வின் அடிப்படையிலானதாகும்.
- பாதுகாப்புப் பணிகள் பணியாளர் கல்லூரிப் படிப்பு என்பது இந்திய ராணுவத்தினால் நடத்தப்படும் ஒரே கல்லூரியாகும்.
- 1905 ஆம் ஆண்டில் நாசிக் அருகே பாதுகாப்புப் பணிகள் பணியாளர் கல்லூரி நிறுவப் பட்டது.
- 1907 ஆம் ஆண்டில், அது குவெட்டாவில் (இப்போது பாகிஸ்தான்) அமைந்துள்ள அதன் நிரந்தர இடத்திற்கு மாற்றப்பட்டது.
- 1947 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, இது

தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள வெலிங்டன் இராணுவக் குடியிருப்புப் பகுதிக்கு மாற்றப் பட்டது.

- இது சென்னை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுச் செயல்படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## பாரீஸ் அமைதி மன்றத்தின் 5வது பதிப்பு

- பாரீஸ் அமைதி மன்றம் என்பது 2018 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஒரு இலாப நோக்கம் அற்ற பிரான்ஸ் நாட்டு அமைப்பாகும்.
- "பல்வேறு நெருக்கடியிலிருந்து வெளியேறுதல்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் இது ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது உலகத் தலைவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள பொதுச் சமூகம் மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த தலைவர்களின் வருடாந்திரக் கூட்டத்தை நடத்துகிறது.
- இந்த வருடாந்திர நிகழ்வின் குறிக்கோள், சர்வதேச மோதல்களை நேரடியாக நிவர்த்தி செய்வது அல்ல, ஆனால் தனியார் மற்றும் பொதுச் சமூகப் பங்காளர்கள் பலருக்கு இடையே பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான சர்வதேச அரங்கை வழங்கச் செய்வதாகும்.
- சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸில் உள்ள உலகப் பொருளாதார மன்றத்தில் பொருளாதாரம் மற்றும் நிதிப் பிரச்சினைகள் மற்றும் முனிச் பாதுகாப்பு மாநாட்டில் பாதுகாப்புச் சிக்கல்கள் தீர்க்கப் படுகின்றன.




# பொருளாதாரச் செய்திகள்

## அரவிந்த் விர்மானி


- இந்திய அரசானது, மூத்தப் பொருளாதார நிபுணரான டாக்டர் அரவிந்த் விர்மானி என்பவரை நிதி ஆயோக் அமைப்பின் ஒரு முழு நேர உறுப்பினராக நியமித்துள்ளது.
- இந்த நியமனத்திற்குப் பிரதமர் மோடி அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.
- நிதி ஆயோக் அமைப்பானது, டாக்டர் V.K. சரஸ்வத், பேராசிரியர் ரமேஷ் சந்த் மற்றும் டாக்டர் V.K. பால் ஆகிய மூன்று உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலான மன்மோகன் சிங் அவர்களின் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் நிதியமைச்சகத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக விர்மானி பணியாற்றினார்.



## பயங்கரவாதத்திற்கு நிதி உதவி வழங்காமை குறித்த மாநாடு (NMFT)

- பயங்கரவாதத்திற்கு நிதி உதவி வழங்காமை குறித்த 3வது மாநாட்டினை இந்தியா நடத்தியது.
- இந்த மாநாடானது முதன்முதலில் 2018 ஆம் ஆண்டில் பாரீஸ் நகரில் நடத்தப் பட்டு, அதைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டில் அது மெல்போர்ன் நகரில் நடத்தப் பட்டது.
- 75க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்ற இந்த மாநாடானது உள்துறை அமைச்சகத்தினால் நடத்தப்பட்டது.
- இது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்காகப் பெருநிதி வழங்கீட்டு தளங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.





## லஞ்ச ஒழிப்பு மேலாண்மை அமைப்பின் சான்றிதழ் வழங்கீடு

- இந்திய எஃகு ஆணைய நிறுவனமானது (SAIL) லஞ்ச ஒழிப்பு மேலாண்மை அமைப்பை


(ABMS) செயல்படுத்திய முதல் மகாரத்னா பொதுத் துறை நிறுவனம் என்ற ஒரு பெருமையைப் பெற்றுள்ளது.

- லஞ்ச ஒழிப்பு மேலாண்மை அமைப்பு என்பது ISO 37001:2016 என்ற தர நிலைக்கு ஏற்ப வடிவமைக்கப் பட்ட ஒரு மேலாண்மை அமைப்பாகும் என்பதோடு அது லஞ்ச நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும், அதைக் கண்டறிவதற்கும் மற்றும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் உதவுகிறது.
- டெல்லியில் உள்ள இந்திய எஃகு ஆணைய நிறுவனத்தின் பெரு நிறுவன அலுவலகம் மற்றும் ஜார்க்கண்டில் உள்ள இந்திய எஃகு ஆணைய நிறுவனத்தின் பொகாரோ எஃகு ஆலைக்கு இந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆர்டெமிஸ் 1




- சந்திரனை நோக்கிய ஆய்வுப் பயணத்தில் இதுவரையில் உருவாக்கப்பட்ட மிக சக்தி வாய்ந்த ஏவுகலத்தினை நாசா விண்ணில் ஏவ உள்ளது.
- இந்த ஏவுதலானது, அமெரிக்க விண்வெளி முகமையின் ஆர்ட்டெமிஸ் என்ற புதிய முதன்மைத் திட்டத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து

இந்த 32 அடுக்கு உயரமான விண்வெளி ஏவுதள அமைப்பு (SLS) விண்ணில் ஏவப்பட்டது.

- ஆர்ட்டெமிஸ் 1 என்ற ஒரு கலத்தின் உச்சியில் விண்வெளி வீரர்கள் அற்ற ஓரியன் விண்கலம் பொருத்தப் பட்டுள்ளது.
- ஆர்ட்டெமிஸ் 1 கலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டப் பிறகு, ஆர்ட்டெமிஸ் 2 கலமானது, 2024 ஆம் ஆண்டில் விண்வெளி வீரர்களுடன் நிலவினை நோக்கி விண்ணில் ஏவப்படும்.
- அதே சமயம் ஆர்ட்டெமிஸ் 3 கலமானது 2025 ஆம் ஆண்டிற்கு முன்பாகவே சந்திர மண்ணில் தடம் பதிக்கும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உணவு கண்ணோட்டம்

- இது உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) வெளியிட்ட இரண்டு வருட உணவுப் கண்ணோட்ட அறிக்கையாகும்.
- 2022 ஆம் ஆண்டு உலகின் உணவு இறக்குமதிச் செலவு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- கோதுமையின் அதிக உற்பத்தியானது சீனா மற்றும் ரஷ்யாவில் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.





## ஆசியாவின் தட்பவெப்ப நிலை 2021

- இது உலக வானிலை அமைப்பு (WMO) மற்றும் ஆசியா மற்றும் பசிபிக்கிற்கான UN பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (ESCAP) ஆகியவற்றால் எகிப்தில் நடந்த COP27 மாநாட்டில் வெளியிடப்பட்டது.
- இதன்படி, 2021 ஆம் ஆண்டில், ஆசியாவிலேயே அதிக பொருளாதார இழப்பைச் சீனா

சந்தித்தது.

- இரண்டாவது அதிகபட்ச இழப்பை இந்தியா சந்தித்தது.
- வெள்ளம் சீனாவில் அதிகப் பொருளாதார இழப்பை ஏற்படுத்திய நிலையில், அதைத் தொடர்ந்து இந்தியா மற்றும் தாய்லாந்து ஆகியவை உள்ளன.
- இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளில் புயல்களால் பொருளாதாரம் பாதிக்கப் பட்டது.




## காலநிலை மாற்ற செயல்திறன் குறியீடு 2023

- ஜெர்மன் வாட்ச், புதிய காலநிலை நிறுவனம் மற்றும் காலநிலை நடவடிக்கை அமைப்பு ஆகிய மூன்று அரசு சாரா சுற்றுச்சூழல் நிறுவனங்களால் இது தொகுக்கப் பட்டுள்ளது.
- இது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் 59 நாடுகளின் காலநிலைப் பாதுகாப்புச் செயல் திறனைக் கண்காணிப்பதற்கான ஒரு சுயாதீனமான கண்காணிப்புக் கருவி ஆகும்
- இதன்படி, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் 59 நாடுகள் இணைந்து, உலகில் 92%க்கும் அதிகமான பசுமை இல்ல வாயுவை (GHG) வெளியேற்றியுள்ளன.
- 2030 ஆம் ஆண்டுக்குள் உமிழ்வைப் பாதியாகக் குறைக்கச் செய்வதில் நாடுகள் எவ்வளவு சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதன் அடிப்படையில் இவை தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- "ஒட்டு மொத்தமாக மிக உயர்ந்த மதிப்பீட்டை அடைய எந்த நாடும் அனைத்துக் குறியீட்டு வகைகளிலும் போதுமான அளவு செயல்படவில்லை" என இந்த அறிக்கை முதல் 3 இடங்களை காலியாக விட்டுள்ளது.
- நான்காவது இடத்தில் டென்மார்க் உள்ள நிலையில், அதைத் தொடர்ந்து ஸ்வீடன் மற்றும் சிலி உள்ளன.
- ஈரான், சவூதி அரேபியா மற்றும் கஜகஸ்தான் ஆகியவை மோசமாக இருந்தன.
- 2023 அறிக்கையில், இந்தியா அதன் குறைந்த உமிழ்வு மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் அதிகரித்து வரும் பயன்பாடு காரணமாக இரண்டு இடங்கள் முன்னேறி 63 நாடுகளில் 8வது இடத்தைப் பிடித்தது.

- இந்தியா தனது 2030 மாசு உமிழ்வு இலக்குகளைச் சந்திக்கும் "பாதையில்" இருப்பதாக இந்த அறிக்கை கூறியுள்ளது.
- இருப்பினும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பாதை 2030 இலக்குக்கான பாதையில் இல்லை.
- பசுமை இல்ல வாயு உமிழ்வுகள் மற்றும் ஆற்றல் பயன்பாடு வகைகளில் இந்தியா உயர் மதிப்பீட்டைப் பெற்றுள்ள நிலையில், அதே நேரத்தில் காலநிலைக் கொள்கை மற்றும் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் பிரிவுகளில் நடுத்தர மதிப்பீட்டைப் பெற்றது.
- கடந்த அறிக்கை முதல், இந்தியா அதன் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்டப் பங்களிப்பைப் புதுப்பித்து, 2070 ஆம் ஆண்டில் நிகரப் பூஜ்ஜிய இலக்கை எட்டும் என அறிவித்துள்ளது.
- உலக நிலக்கரி உற்பத்தியில் 90%க்கு பொறுப்பான ஒன்பது நாடுகளில் இந்தியாவும் இருப்பதாகவும், 2030 ஆம் ஆண்டளவில் அதன் எண்ணெய், எரிவாயு மற்றும் எண்ணெய் உற்பத்தியை 5%க்கும் அதிகமாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் இந்த அறிக்கை குறிப்பிட்டது.
- நிகர சுழியம் என்பது வளிமண்டலத்தில் வெளியிடப்படும் பசுமை இல்ல வாயுக்களுக்கும் வெளியே எடுக்கப்பட்ட வாயுக்களுக்கும் இடையிலான சமநிலையை அடைவதாகும்.




# மாநிலச் செய்திகள்

## மேகாலயாவின் வாங்கலா திருவிழா

- மேகாலயாவின் காரோ சமூகத்தினரிடையே இது மிகவும் பிரபலமான பண்டிகைகளில் ஒன்றாகும்.
- இது கருவுறுதலிற்கான சூரியக் கடவுளான சல்ஜோங்கின் நினைவாக நடைபெறும்

ஒரு அறுவடைத் திருவிழாவாகும்.

- இது 100 பறைத் திருவிழா என்றும் அழைக்கப்படுகிறது.
- திபெத்டோ-பர்மன் இன காரோ பழங்குடியினர், முக்கியமாக இந்திய மாநிலங்களான மேகாலயா, அஸ்ஸாம், திரிபுரா மற்றும் நாகாலாந்து மற்றும் வங்கதேசத்தின் அருகில் உள்ள பகுதிகளிலும் வாழ்கின்றனர்.




## அமுர் பால்கன் திருவிழா

- மணிப்பூர் வன ஆணையம் அமுர் பால்கன் திருவிழாவின் 7வது பதிப்பை இம்பாலில் உள்ள தமெங்லாங் மாவட்டத்தில் கொண்டாட திட்டமிட்டுள்ளது.
- அமுர் பால்கன் உலகின் மிக நீண்ட தூரம் பறக்கும் ஒரு புலம்பெயர் பறவையாகும்.
- இது பால்கன் குடும்பத்தின் உலகின் மிக நீண்ட தூரம் பயணம் செய்யும் சிறிய பறவை ஆகும்.
- அமுர் பால்கன் தென்னாப்பிரிக்காவில் உள்ள தங்களது குளிர்கால வாழிடத்திற்கு இடம் பெயர்கிறது.
- அவை வழக்கமாக அக்டோபர் மாதத்தில் நாகாலாந்து மற்றும் மணிப்பூருக்கு அதிக எண்ணிக்கையில் வந்து சேரும்.





## பெசா சட்டம் - மத்தியப் பிரதேசம்

- மத்தியப் பிரதேச மாநிலம் பட்டியலிடப்பட்டப் பகுதிகளுக்குப் பஞ்சாயத்து முறை

நீட்டிப்பு (PESA) சட்டத்தை அமல்படுத்தியுள்ளது.

- கிராம சபைகளின் தீவிர ஈடுபாட்டுடன் பழங்குடியின மக்களைச் சுரண்டலில் இருந்து பாதுகாப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- PESA சட்டம் கிராமப் பஞ்சாயத்துகள் சிறு வன உற்பத்திகள், நிலம் மற்றும் சிறு நீர்நிலைகள் மற்றும் அரசாங்க திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பான விவகாரங்களை முடிவு செய்ய அனுமதிக்கும்.
- இந்தப் பட்டியலிடப்பட்டப் பகுதிகளில் கொத்தடிமைத் தொழிலாளர்களைக் கட்டுப் படுத்துவதற்காக வேண்டி புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பதிவுகளையும் இது பராமரிக்கும்.




## உலகில் முதல் முறையாக ஆளில்லா விமானங்கள் மூலம் கால்நடை தடுப்பூசிகள் விநியோகச் சேவை




- இந்திய நோய் தடுப்பியல் நிறுவனத்தின் (IIL) விலங்குகளுக்கான தடுப்பூசியானது ஆளில்லா விமானங்கள் மூலம் விநியோகிக்கப்பட்ட உலகின் முதல் தடுப்பூசியாக மாறியுள்ளது.

- ஹைதராபாத்தைத் தலைமையிடமாகக் கொண்ட இந்திய நோய்த் தடுப்பியல் நிறுவனமானது, ஆசியாவிலேயே அதிகளவில் தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் ஒன்றாகும்.
- டெக் ஈகிள் என்ற ஆளில்லா விமான விநியோக சேவை வழங்கீட்டு புத்தொழில் நிறுவனமானது, அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் கால்நடை பராமரிப்புப் பணிகளுக்காக இந்தத் தடுப்பூசி விநியோகத்தை மேற்கொண்டது.
- முதலாவது ஆளில்லா விமான சேவையானது ரோயிங்கில் இருந்து பக்லாம் வரை மேற் கொள்ளப் பட்டது.
- 'வான்வழியாக மருந்து வழங்கீடு' என்ற திட்டத்தின் வெற்றிக்குப் பிறகு, அருணாச்சலப் பிரதேச மாநிலமானது ஆளில்லா விமானம் மூலம் கால்நடைகளுக்குத் தடுப்பூசிகள் வழங்கும் சேவையைத் தொடங்கியுள்ளது.
- ஆளில்லா விமானம் மூலம் தடுப்பூசிகள் வழங்கப்படுவதன் மூலம், தடுப்பூசிகள் தொலைதூர கடினமான நிலப்பரப்புகளை விரைவாக அடைவது மட்டுமல்லாமல், பல நோய்களிலிருந்து கால்நடைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான சில முக்கியமான தடுப்பூசிகளை சரியான நேரத்தில் வழங்குவதற்கும் உதவும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

# விளையாட்டுச் செய்திகள்

## கபடி உலகக் கோப்பை 2025

- இது ஐக்கியப் பேரரசின் மேற்கு மிட்லாண்ட்ஸ் பகுதியில் நடைபெறவுள்ளது.
- இது முதல் முறையாக ஆசியாவிற்கு வெளியே நடத்தப்படுகிறது
- இதனை உலக கபடிக் கூட்டமைப்பு (WKF) அறிவித்துள்ளது.




## IOA தடகள ஆணைய உறுப்பினர்

- ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற எம்.சி.மேரி கோம், பி.வி.சிந்து, மீராபாய் சானு மற்றும் ககன் நரங் உட்பட 10 சிறந்த விளையாட்டு வீரர்கள் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் (IOA) தடகள ஆணையத்தின் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- இந்த ஆணையத்தின் தலைவராக ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற மேரி கோம் ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- டேபிள் டென்னிஸ் ஜாம்பவான் அச்சந்தா சரத் கமல் இந்த அமைப்பின் துணைத்


தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் புதிய சாசனத்தின் படி, விளையாட்டு வீரர்கள் ஆணையத்தில் ஆண் மற்றும் பெண் உறுப்பினர்களுக்குச் சமமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும்.
- தடகள ஆணையத்தின் உடனடிப் பணியானது, ஐஓஏவின் பொதுச் சபையில் வாக்களிக்கும் உறுப்பினர்களாக இருக்க வேண்டி, சிறந்த திறமை கொண்ட எட்டு விளையாட்டு வீரர்களை அடையாளம் காண்பதாகும்.
- ஒலிம்பிக் போட்டிகள், ஆசிய விளையாட்டுக்கள் மற்றும் பிற சர்வதேச தடகள விளையாட்டுகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு விளையாட்டு வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்புடைய அமைப்பு இந்த இந்திய ஒலிம்பிக் சங்கம் ஆகும்.



# முக்கிய தினங்கள்

## உலக நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் தினம் - நவம்பர் 16





- நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோயானது, உலகளவில் ஏற்படும் இறப்புகளுக்கான மூன்றாவது முக்கிய காரணமாக உள்ளது.
- நவம்பர் மாதத்தின் மூன்றாவது புதன்கிழமையன்று (இந்த ஆண்டு நவம்பர் 16), உலக உலக நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் தினமானது அனுசரிக்கப்படுகிறது.


- 2022 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "உங்கள் வாழ்விற்கான நுரையீரல்" என்பதாகும்.
- இது நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய்க்கான ஒரு உலகளாவிய முன்னெடுப்பு அமைப்பினால் (GOLD) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தேசிய வலிப்பு நோய் தினம் - நவம்பர் 17

- வலிப்பு நோய் என்று அழைக்கப்படும் ஒரு தொடர்ச்சியான மூளை நோய் ஆனது கால இடைவெளியில் "வலிப்பு" அல்லது "கை காலிழுப்பு" என்று குறிக்கப்படுகிறது.
- ஒவ்வோர் ஆண்டின் நவம்பர் மாதம் ஆனது வலிப்பு நோய் குறித்த விழிப்புணர்வு மாதமாக அனுசரிக்கப் படுவதோடு இந்தப் பயங்கரமான நோயின் அறிகுறிகள், முன் அறிகுறிகள் மற்றும் தாக்கம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தச் செய்வதற்காகவும் அனுசரிக்கப்படுகிறது.
- 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய வலிப்பு நோய் விழிப்புணர்வு மாதத்தின் (NEAM) கருத்துரு "ME இல்லாமல் NEAM இல்லை" என்பதாகும்.




## உலகத் தத்துவ தினம் - நவம்பர் 17




- இது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தின் மூன்றாவது வியாழன் அன்று (இந்த ஆண்டு நவம்பர் 17) அனுசரிக்கப்படுகிறது.
- யுனெஸ்கோ அமைப்பானது இத்தினத்தினை சர்வதேச தினமாக அறிவித்துள்ளது.

- 2022 ஆம் ஆண்டிற்கான உலகத் தத்துவ தினத்தின் கருத்துரு 'எதிர்காலத்தின் மனிதன்' என்பதாகும்.

## சர்வதேச மாணவர் தினம் – நவம்பர் 17


- இரண்டாம் உலகப் போரின் போது ப்ராக் நகரில் நடைபெற்ற நிகழ்வுகள் காரணமாக, நவம்பர் 17 ஆம் தேதியானது சர்வதேச மாணவர் தினமாக அனுசரிக்கப்பட்டது.
- 1939 ஆம் ஆண்டில் ப்ராக் பல்கலைக் கழகத்தை நாஜிக்கள் தாக்கிய போது அதைக் காத்த மாணவர் ஆர்வலர்களின் துணிச்சலைக் கௌரவிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாள் மாணவர்களின் ஒத்துழைப்பு, பன்முகத் தன்மை மற்றும் பன்முகக் கலாச்சாரத்தைப் போற்றுகிறது.




## உலக குறைப்பிரசவ சிசு தினம்- நவம்பர் 17

- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப் படி, குறைப்பிரசவ சிசு என்பது கர்ப்ப காலத்தின் 37 வாரங்கள் நிறைவடைவதற்கு முன்பு உயிருடன் பிறந்த குழந்தைகள் என வரையறுக்கப் படுகிறது.
- இது மிகவும் முன்கூட்டிய (28 வாரங்களுக்கும் குறைவானது), மிகக் குறைப்பிரசவம் (28 முதல் 32 வாரங்கள்) மற்றும் சற்று முந்தையது முதல் மிக தாமதமான முன்கூட்டியே பிறந்த (32 முதல் 37 வாரங்கள்) பிற வகை குழந்தைகளையும் உள்ளடக்கியது.
- குறைப் பிரசவம், அதாவது கர்ப்பத்தின் 37 வாரங்களுக்கு முன் ஒரு குழந்தை பிறப்பதே பச்சிளம் குழந்தைகள் அதிகம் இறப்பதற்கு ஒரு மிகப்பெரிய காரணமாகும்.
- கங்காரு இனம் சார்ந்த தாய்ப் பராமரிப்பு என்பது குறைமாத அல்லது குறைப் பிரசவ குழந்தைகளுக்கான பராமரிப்பு முறையாகும்.
- இது குறைப்பிரசவ குழந்தைகளுக்கான நேரடியாக உடல் ரீதியில் தொடர்பு கொள்ளச் செய்யும் ஒரு முறையாகும்.
- இந்த ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'ஒரு பெற்றோரின் அரவணைப்பு: ஒரு சக்தி வாய்ந்த சிகிச்சை. பிறந்த தருணத்திலிருந்து தோலுடன் தொடர்புகொள்ள

செய்தல்' என்பதாகும்.




## அகில இந்தியக் கூட்டுறவு வாரம் - நவம்பர் 14 முதல் 20 வரை

- இந்த ஆண்டின் "அகில இந்தியக் கூட்டுறவு வாரக் கொண்டாட்டங்களின் கருத்துரு, "இந்தியா@75" கூட்டுறவுகளின் வளர்ச்சி மற்றும் எதிர்காலம்" என்பதாகும்.
- தற்போது இந்தியா உலகின் மிகப்பெரிய கூட்டுறவு அமைப்பாக மாறியுள்ளது.
- இந்த வார அனுசரிப்பானது முதன் முதலில் இந்தியாவில் 1953 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- கூட்டுறவு அமைப்புகளின் உச்சநிலை அமைப்பான இந்திய தேசியக் கூட்டுறவு சங்கம் இதனை அனுசரிக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★